**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.554/2020**

# CASE SUMMARY

<table>
<tr><th>Sl.No.</th><th>Description</th><th colspan="2">Remarks</th></tr>
<tr><td>1</td><td>The period of remand of the accused</td><td colspan="2">Remanded on : Nil<br>15.11.2025 (on NBW)<br>Released on : Nil</td></tr>
<tr><td>2</td><td>The date of filing of complaint/final report in the Court</td><td colspan="2">03.12.2020</td></tr>
<tr><td>3</td><td>The date of committal of the case to the Court of Sessions</td><td colspan="2">Not Applicable</td></tr>
<tr><td>4</td><td>The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be</td><td colspan="2">22.02.2021</td></tr>
<tr><td>5</td><td>Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .</td><td colspan="2">Nil</td></tr>
<tr><td rowspan="6">6</td><td rowspan="6">Date of examination in Chief and Cross examination of a witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>P.W.1 – 30.01.2026</td><td>30.01.2026</td></tr>
<tr><td>P.W.2 – 03.02.2026</td><td>03.02.2026</td></tr>
<tr><td>P.W.3 – 16.02.2026</td><td>No Cross</td></tr>
<tr><td>P.W.4 –23.02.2026</td><td>23.02.2026</td></tr>
<tr><td>P.W.5 –02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>7</td><td>Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the</td><td colspan="2">05.03.2026</td></tr>
</table>



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:03 +0530

| | | |
|---|---|---|
| | Court | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable |

**//எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக:**<br>**காவல் ஆய்வாளர்,**<br>மன்னார்குடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண். 395/2019,<br>ச/பி.294(பி), 324, 506(2) இதச | | .......குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| மணி , வயது 45/2021,<br>த/பெ. நாகராஜன்,<br>ராவணன் குளம்,<br>மன்னார்குடி. | | ...... எதிரி |

இவ்வழக்கானது கடந்த 30.11.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 12.03.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் D.துர்காதேவி நிலை.2 அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.எஸ்.நடேஷ் அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று ( 12.03.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்........

**//தீர்ப்புரை//**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

கடந்த 05.06.2019 ந் தேதி காலை 07.30 மணியளவில் மன்னார்குடி நகர காவல்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:10 +0530

சரகம் மன்னார்குடி புதுத்தெரு சிங்கப்பூர் ஆப்டிகல்ஸ் அருகே புகார்தாரர் முத்து (எ) முத்துக்கிருஷ்ணன் என்பவர் தன்னுடைய மணி பர்ஸ் மற்றும் செல்போனை காணவில்லை என எதிரி மணி என்பவரிடம் கேட்க எதிரியானவர் தேவடியா குச்சிக்காரி மகனே என்னை பார்த்து எப்படி கேட்கலாம் என திட்டி அங்கு கிடந்த சோடா பாட்டிலால் புகார்தாரரின் இடது காது ஓரம் தாக்கி சொற்பகாயத்தை உண்டு பண்ணி பாட்டிலை காட்டி தன்னை பற்றி எதுவும் பேசினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி),324, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என மன்னார்குடி நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரியிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி),324, 506(2) ன் கீழ் கு.வி.மு.ச. பிரிவு 240 ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சாஆ.1 முதல் அ.சாஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அசா 1 முத்து (எ) முத்துகிருஷ்ணன்** தனது சாட்சியத்தில் தான் வேளாங்கன்னி பேன்சிஸ்ஸ்டோரில் வேலை பார்த்து வருகிறேன் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 5,6 ஆண்டுகளுக்கு முன்பு காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் மன்னார்குடி மூன்றாம் தெரு, புளியமரத்தருகே டேனிங்கில் சேகர் என்பவரும், மணி என்பவரும் சேகர் போனை மணி எடுத்துக்கொண்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த இடத்தில் இருந்த தன்னை கூப்பிட்டு சேகர் என்பவர் மேற்படி


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.12 07:27:15 +0530

சங்கதியை சொன்னார் என்றும், தான் எதிரி மணியிடம் போனை எடுத்தியா என்று கேட்டேன் என்றும், அதற்கு மணி தன்னை நீ பாத்தியா என்று கேட்டு திரும்பும் பொழுது அவர் வைத்திருந்த பாட்டிலால் இடது காது ஓரத்தில் குத்தினார் என்றும், அதில் தனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு மயக்கம் வந்து கீழே விழுந்து விட்டேன் என்றும், தன்னை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேகர் என்பவர் சேர்த்தார் பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றும், 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றும், தான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்த சம்பவத்தன்றே போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும், அதில் உள்ள சங்கதிகள் தனக்கு தெரியும் என்றும், போலீசார் விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.2 முருகானந்தம்** தனது சாட்சியத்தில் தான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன் என்றும், அசா.1 மற்றும் எதிரியை தெரியும் என்றும், கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு மன்னார்குடி மூன்றாம் தெரு இறக்கத்தில் மன்னார்குடி நால்ரோடு பிரியும் இடத்தில் தான் காலை நேரத்தில் மணி 07.30 இருக்கும் என்றும், தான் டீ சாப்பிடலாம் என்று நடந்து வந்துகொண்டிருந்தேன் என்றும், அப்போது மணி என்பவர் சோடாபாட்டிலை உடைத்து முத்துவை இடது காதில் குத்தினார் என்றும், அதனால் முத்து மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், அருகில் இருந்த சேகர் தடுத்துக்கொண்டிருந்தார் என்றும், சம்பவ இடத்தில் மூன்று பேர் தான் இருந்துகொண்டிருந்தோம் என்றும், செல்போன் பிரச்சினையால் தான் இந்த பிரச்சினை நடந்தது என்றும், முத்து மயக்கநிலையிலே இருந்ததால் தானும், சேகர் என்பவரும் முத்துவை மன்னார்குடி GH-க்கு அழைத்து சென்று Admit செய்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.3 பாலாஜி** தனது சாட்சியத்தில் தான் சமையல் வேலை செய்து வருகிறேன் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும், வழக்கும் சம்பவம் எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:19 +0530

**அசா.4 சந்தியா உதவி மருத்துவர்** தனது சாட்சியத்தில் தான் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 05.06.2019 ம் தேதியன்று மன்னார்குடி அரசு மருத்துவமனையில் 24 மணி நேர பணியில் இருந்தபோது காலை 08.00 மணியளவில் மன்னார்குடி தென்வட 6 ம் தெருவைச் சேர்ந்த கணேசன் மகன் முத்து என்பவரை அவரது தம்பி முருகானந்தம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், அவரை விசாரித்த போது தன்னை காலை 07.30 மணியளவில் மன்னார்குடி புதுத்தெருவில் தெரிந்த ஒரு நபர் சோடாபாட்டிலைக் கொண்டு தன்னை தாக்கியதாக சொன்னார் என்றும், அவரை பரிசோதித்த போது இடது காது அருகில் 4x2x2 cm அளவுள்ள பிளவுகாயம் காணப்பட்டது என்றும், அவருக்கு முதலுதவி செய்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தால் மேற்படி மருத்துவமனையில் நோயாளி அனுமதியாகியதாக தெரியவரவில்லை என்றும், எனவே மேற்படி நபருக்கு காயம் குறித்து கருத்துரை வழங்க முடியாது என்று சான்று வழங்கினேன் என்றும், தன்னால் பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அசா.5 இராமலிங்கம் சிறப்பு உதவி ஆய்வாளர்** தனது சாட்சியத்தில் தான் தற்போது மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் ரவிக்குமார் மற்றும் புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.மனோகரன் ஆகியோர்களின் கையொப்பம் நன்கு தெரிந்த வகையிலும், விசாரணை அதிகாரி தற்போது இறந்து விட்டதாலும் கால தாமத்தினை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 06.06.2019 ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல் நிலைய தலைமை காவலர் ரவிக்குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது 17.00 மணிக்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.12 07:27:24 +0530

கணேசன் மகன் முத்துக்கிருஷ்ணன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து அதனடிப்படியில் நிலைய குற்ற எண். 395-2019 ல் 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் எதிரியின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அச்சு படிவம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு கோப்பை விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார் என்றும், வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே பிற்பகல் 18.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரமணி மற்றும் பாலாஜி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், இச்சம்பவத்தில் காயம் அடைந்த வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சந்தியா என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்துள்ளார் என்றும், ஏற்கெனவே, விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்று அசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், சாட்சிகளை விசாரித்த வகையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது தேடியும் கிடைக்காததால் இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது 294(பி), 324, 506(2) இதச ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என்று குற்ற இறுதியறிக்கை 10.07.2019 ம் தேதி தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

## 5. எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவுதல்

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

## 6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்

இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:28 +0530

அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.

**7.** அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**8.** எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி),324, 506(2) ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேலும், அரசுத்தரப்பில் அசா 1 முதல் 5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சிகள் 4,5,6,7 ஆகிய சாட்சிகள் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 8 புலன் விசாரணை அதிகாரிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராமலிங்கம், மற்றும் உதவி ஆய்வாளர் திரு. மனோகரன் காவல் உதவி ஆய்வாளர் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கரவு செய்யப்பட்டு அவருக்கு பதிலாக காவல் உதவி ஆய்வாளர் திரு.இராமலிங்கம் சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவரை கூடுதல் சாட்சியாக சேர்த்து விசாரிக்க கோரியதன் அடிப்படையில் அசா.5 ஆக விசாரணை செய்யப்பட்டு அசாஆ.3 முதல் அசாஆ. 5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. இவ்வழக்கில் அசா.1 புகார்தாரராகவும் ஆகவும், அ.சா.2 கண்ணுற்ற சாட்சியாகவும் அ.சா.3 பார்வை மகசர் சாட்சியாகவும், அசா.4 மருத்துவர் சாட்சியாகவும், அசா.5 புலன் விசாரணை அதிகாரியாகவும் விசாரிக்கப்பட்டுள்ளார் .

**11. முதலாவது குற்றச்சாட்டிற்கு தீர்வு**

11.1) கடந்த 05.06.2019 ந் தேதி காலை 07.30 மணியளவில் மன்னார்குடி நகர காவல் சரகம் மன்னார்குடி புதுத்தெரு சிங்கப்பூர் ஆப்டிகல்ஸ் அருகே புகார்தாரர் முத்து (எ) முத்துக்கிருஷ்ணன் என்பவர் தன்னுடைய மணி பர்ஸ் மற்றும் செல்போனை காணவில்லை என எதிரி மணி என்பவரிடம் கேட்க எதிரியானவர் தேவடியா


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.12 07:27:32 +0530

குச்சிக்காரி மகனே என்னை பார்த்து எப்படி கேட்கலாம் என்று காமக்குரோதமாக திட்டிய எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

> "ஆபாசமான வார்த்தையானது ஒரு பொதுவான இடத்தில் பேசப்பட்டிருக்கவேண்டும். எதிரியால் பேசப்பட்ட வார்த்தையால் வாதிக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பேசியதால் ஏற்பட்ட பாதிப்பை வாதி தன்னுடைய முதல் விசாரணையில் சாட்சியமளித்திருக்கவேண்டும். மேற்படி குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சாட்சியங்களோடு பரிசீலிக்கும்போது...

11.2) அசா 1 முத்து (எ) முத்துகிருஷ்ணன் அவரது முதல் விசாரணையில் " கடந்த 5,6 ஆண்டுகளுக்கு முன்பு காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் மன்னார்குடி மூன்றாம் தெரு, புளியமரத்தருகே டேனிங்கில் சேகர் என்பவரும், மணி என்பவரும் சேகர் போனை மணி எடுத்துக்கொண்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த இடத்தில் இருந்த தன்னை கூப்பிட்டு சேகர் என்பவர் மேற்படி சங்கதியை சொன்னார் என்றும், தான் எதிரி மணியிடம் போனை எடுத்தியா என்று கேட்டேன் என்றும், அதற்கு மணி தன்னை நீ பாத்தியா என்று கேட்டு திரும்பும் பொழுது அவர் வைத்திருந்த பாட்டிலால் இடது காது ஓரத்தில் குத்தினார் என்றும், அதில் தனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு மயக்கம் வந்து கீழே விழுந்து விட்டேன் என்று சாட்சியமளித்துள்ளார்.

11.3) சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அசா.2 முருகானந்தமும் எதிரி அசா.1 காமக்குரோத வார்த்தையால் திட்டியதாக சாட்சியம் அளிக்கவில்லை.

11.4) அசா.1 முத்து (எ) முத்துக்கிருஷ்ணன் எதிரி தன்னை காமக்குரோதமான வார்த்தைகளால் திட்டியதாகவோ அதனை கேட்ட தனக்கு அருவருப்பும், எரிச்சலும் ஏற்பட்டதாகவோ எதிரி மீது குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் இந்நீதிமன்றத்தின் அளிக்கவில்லை என்பதாலும், கண்ணுற்ற சாட்சியான அசா.2 முருகானந்தம்



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:36 +0530

என்பவரும் அசா.1 ஐ எதிரி அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சாட்சியமளிக்காத நிலையில் எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டானது அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

## 12. இரண்டாவது குற்றசாட்டிற்கு தீர்வு

12.1) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி சோடா பாட்டிலால் புகார்தாரரின் இடது காது ஓரம் தாக்கி சொற்பகாயத்தை உண்டு பண்ணிய எதிரி மீது இதச பிரிவு 324 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

12.2) அரசு தரப்பு வழக்கின்படி சம்பவமானது 05.06.2019 ந் தேதி 07.30 மணியளவில் புதுத்தெரு, மகேந்திரா ஷோரூம் , மன்னார்குடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அசா.1 தனது முதல் விசாரணையில் சம்பவம் நடந்த இடமாக மன்னார்குடி, மூன்றாம் தெரு, புளியமரத்தருகில் டேர்னிங் என்று குறிப்பிட்டுள்ளார். அசா.2 முருகானந்தம் மன்னார்குடி, மூன்றாம் தெரு இறக்கத்தில் நால்ரோடு பிரியும் இடத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் புலன் விசாரணை அதிகாரி அசா.5 மூன்றாம் தெரு என்பதும், புதுத்தெரு என்பதும் வெவ்வேறு இடம் என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

12.3) அசா.1 முத்து (ஏ) முத்துகிருஷ்ணன் நீதிமன்றத்தில் " எதிரி மணியிடம் போனை எடுத்தியா என்று கேட்டேன் என்றும், அதற்கு மணி தன்னை நீ பாத்தியா என்று கேட்டு திரும்பும் பொழுது அவர் வைத்திருந்த பாட்டிலால் இடது காது ஓரத்தில் குத்தினார் என்றும், அதில் தனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு மயக்கம் வந்து கீழே விழுந்து விட்டேன் என்றும், தன்னை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேகர் என்பவர் சேர்த்தார் பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள் என்றும், 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.4) அசா.2 முருகானந்தம் தனது சாட்சியத்தில் "கடந்த மூன்று வருடங்களுக்கு


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.12 07:27:41 +0530

முன்பு மன்னார்குடி மூன்றாம் தெரு இறக்கத்தில் மன்னார்குடி நால்ரோடு பிரியும் இடத்தில் தான் காலை நேரத்தில் மணி 07.30 இருக்கும் என்றும், தான் டீ சாப்பிடலாம் என்று நடந்து வந்துகொண்டிருந்தேன் என்றும், அப்போது மணி என்பவர் சோடாபாட்டிலை உடைத்து முத்துவை இடது காதில் குத்தினார் என்றும், அதனால் முத்து மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டார் என்றும், அருகில் இருந்த சேகர் தடுத்துக்கொண்டிருந்தார் என்றும், சம்பவ இடத்தில் மூன்று பேர் தான் இருந்துகொண்டிருந்தோம் என்றும், செல்போன் பிரச்சினையால் தான் இந்த பிரச்சினை நடந்தது என்றும், முத்து மயக்கநிலையிலே இருந்ததால் தானும், சேகர் என்பவரும் முத்துவை மன்னார்குடி GH-க்கு அழைத்து சென்று Admit செய்தோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12.5) அசா.4 ஆக விசாரணை செய்யப்பட்ட உதவி மருத்துவர் சந்தியா இடது காதில் 4x2x2 cm அளவுள்ள பிளவு காயம் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். நோயாளியை முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி மருத்துவமனையில் நோயாளி அனுமதியாகியதாக தெரியவில்லை என்பதால் மேற்படி நபருக்கு காயம் குறித்து கருத்துரை வழங்க முடியாது என்று சான்று வழங்கப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் புகார்தாரர் முத்து (எ) முத்துகிருஷ்ணனை தாக்க பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் சோடாபாட்டிலும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை.

12.6) அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்கள் சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கில் கூறப்பட்டதாக மன்னார்குடி புதுத்தெருவில் சம்பவம் நடந்ததா என்ற ஐயம் எழுகிறது. மேலும், காயம்பட்ட முத்து (எ) முத்துகிருஷ்ணனுக்கு காயம் குறித்து கருத்துரை வழங்கப்படாததும், அரசு தரப்பு வழக்கை பாதிப்பதாகவே உள்ளது. அசா.1 முதல் அசா.4 வரையிலான சாட்சியங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களிலிருந்து அசா.1-க்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்பட்டதாக சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம்


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.03.12 07:27:46 +0530

செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**13. மூன்றாவது குற்றசாட்டிற்கு தீர்வு**

இந்நீதிமன்றத்தால் எதிரி மீது சுமத்தப்பட்ட **3 வது** குற்றச்சாட்டான இதச பிரிவு 506(2) ஐ ஆய்வு செய்யும்போது, எதிரியானவர் அசா.1-யை பார்த்து பாட்டிலை காட்டி தன்னை பற்றி எதுவும் பேசினால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரி மீது இதச பிரிவு 506(2)ன்கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பு சாட்சியங்களோடு பரிசீலிக்கும்போது அசா.1 அவரது முதல் நீதிமன்ற விசாரணையில் மேற்படி எதிரி மீது இதச பிரிவு 506(2) ஈர்க்கும் வகையில் எதிரி கையில் சோடா பாட்டிலை வைத்துக்கொண்டு தன்னை அச்சுறுத்தும் வகையில் தன்னை கொன்று விடுவார் என்ற உயிர் பயமோ, பீதியோ ஏற்பட்டதாக அசா.1 நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் முன் வைக்காத நிலையிலும், அதேபோல் சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரணைசெய்யப்பட்ட அசா.2-ம் எதிரி அசா.1-ற்கு கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிக்கு எதிராக வனையப்பட்ட பிரிவு 506(2) இதசவின் கீழான குற்றச்சாட்டானது சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

14.எனவே, மேலே விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழான குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

15. இறுதியாக , இவ்வழக்கின் எதிரி மீதான இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

16. இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே, அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:50 +0530

17. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

**1.அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அசா.1 | முத்து (எ) முத்துக்கிருஷ்ணன் |
| அசா.2 | முருகானந்தம் |
| அசா.3 | சேகர் |
| அசா.4 | சந்தியா உதவி மருத்துவர் |
| அசா.5 | இராமலிங்கம் சிறப்பு உதவி ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசா.1 | 06.06.2019 | புகார் வாக்குமூலம் |
| அசா.2 | 05.06.2019 | விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று |
| அசா.3 | 24.06.2019 | முதல் தகவல் அறிக்கையின் அச்சுப்படிவம் |
| அசா 4. | 06.06.2019 | பார்வை மகசர் |
| அசா.5 | 06.06.2019 | வரைபடம் |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை.

4. எதிரி தரப்பு சாட்சிகள் , மற்றும் சான்று பொருட்கள் : இல்லை.

5 எதிரி தரப்பு சான்றாவணங்கள்: இல்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 07:27:59 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,

திருவாரூர்.

**நகல்**

சிறை கண்காணிப்பாளர்,

மாவட்ட சிறை, நாகப்பட்டினம்.